www.tamilarangam.net

வீரகேசரி 24/5/87

★ புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயா பேச்சு:

# இன விரோத சக்திகளை புலிகள் அனுமதிக்கமாட்டா

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு இன விரோத சக்திகளுக்கும் இடம் கொடாது"

இவ்வாறு விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் பி. றயாகரன் தொடர்பாக விடுதலைப் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாட்டினை நேற்றுக்காலை பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்தில் விளக்கிக் கூறிய புலிகளின். பிரதித் தலைவர் கோ. சிறி (மாத்தயா) குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய அவர்;

"றயாகரன் ஒரு பல்கலைக் கழக மாணவன் என்ற ரீதியிலோ அல்லது பல்கலைக்கழகப் போராட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டவர் என்பதாலோ நாம் அவரைக் கைது செய்யவில்லை. கடந்த சித்திரை மாதம் 18 ஆம் திகதி பணத்துடன் ஆயுதம் வாங்குவதற்காகத் திரிந்த இன விரோதி ஒருவன் எம்மால் கைது செய்யப்பட்டான். இது தொடர்பான மேலதிக விசாரணையின்பின்பு சட்டவிரோத ஆயுதப்பரிமாற்றத்தில் ஈடுபட்ட ஆறுவது நபராக 28ஆம் திகதி சித்திரை மாதம் றயாகரன் கைதுசெய்யப்பட்டார். அப்போது அவரிடமிருந்த ஒரு கைத்துப்பாக்கியும், நூற்றிஐம்பத்திநான்கு ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

இவர் ஒரு இயக்கத்தின் உறுப்பினரும், தற்போது அவ்வியக்கத்தின்மத்தியகுழு உறுப்பினருமாவார். எது எப்படியாலும் இவரது உயிருக்கோ அல்லது கல்விக்கோ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலாக இருக்கமாட்டார்கள்" என்றார்.

இக்கூட்டத்தில் பல்கலைக் கழக மாணவர் அமைப்புக் குழுவின் சார்பில் உ. ஔவை. விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இ. திலீபன், ஸோல்ற் அமைப்பின் பொறுப்பாளர் முரளி ஆகியோர் கலந்துகொண்டனர். இறுதியில் றயாகரன் விடுதலைப் புலிகளின் கருத்திற்குப் பதிலளித்துப் பேசினார்.